(6 pages) **Reg. No. : ..............................**

**Code No. : 8759** **Sub. Code : PTLM 23**

M.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2018.

Second Semester

Tamil

பக்தி இலக்கியம்

(For those who joined in July 2017 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. யாக்கைக்கு இரைதேடி அலமந்து வாழ்வார் யாருக்கு இரையாவார்கள்?

   (அ) கூகைக்கு (ஆ) காக்கைக்கு

   (இ) பருந்துக்கு (ஈ) கழுகுக்கு

2. விண்ணவர் தொழும் வெண்ணியில் அண்ணலை அடைய வல்லார்க்கு எது இல்லை?

   (அ) அல்லல் (ஆ) ஆற்றல்

   (இ) அறிவு (ஈ) அன்பு

3. "உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
   முறுக வாங்கிக் கடைய முன்நிற்குமே" – யார் கூற்று?

   (அ) மாணிக்கவாசகர் (ஆ) சுந்தரர்

   (இ) சம்பந்தர் (ஈ) திருநாவுக்கரசர்

4. சிவபெருமானைத் தண்டத்தால் அடித்த மன்னன் யார்?

   (அ) அரிமர்த்தனப் பாண்டியன்

   (ஆ) கோப்பெருஞ்சோழன்

   (இ) சேரன் செங்குட்டுவன்

   (ஈ) கரிகால சோழன்

5. கண்ணன் சக்கரத்தால் தலையை அறுத்தவனின் பெயர் என்ன?

   (அ) இரணியன் (ஆ) சீமாலிகன்

   (இ) கம்சன் (ஈ) தக்கன்

6. குடக்கூத்து ஆடியவன் யார்?

   (அ) சிவன் (ஆ) திருமால்

   (இ) இந்திரன் (ஈ) உருத்திரன்

7. "மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும் இவ்
   வையம் தன்னொடும் கூடுவது இல்லை" – யார் கூற்று?

   (அ) திருப்பாணாழ்வார் (ஆ) பத்திரகிரியார்

   (இ) குலசேகராழ்வார் (ஈ) வள்ளலார்



Nesamony Memorial Christian College, Marthandam

8. பரியனாகி வந்த அவுணன் யார்?

(அ) பகாசுரன் (ஆ) இரணியன்

(இ) சகடாசூரன் (ஈ) இராவணன்

9. கூன்மிகுந்த முதுகை உடையவன் யார்?

(அ) கிறிஸ்த்தியன் (ஆ) நற்செய்தியாளர்

(இ) இணை நெஞ்சான் (ஈ) சாத்தான்

10. "தோல் பாவை நால் ஆள்சுமையாகும்" – யார் கூற்று?

(அ) வள்ளலார் (ஆ) பத்திரகிரியார்

(இ) தாயுமானவர் (ஈ) ஔவையார்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் <u>250 வார்த்தைகளுக்கு</u> மிகாமல் விடை தருக.

11. (அ) நீற்றறையில் சேர்க்கப்பட்ட திருநாவுக்கரசர் இறைவனின் திருவடியை வாழ்த்திய தன்மையை விவரி.

(அல்லது)

(ஆ) திருவெண்ணியூர் இறைவனை வணங்கினால் ஏற்படும் நன்மைகளை விளக்குக.



12. (அ) இறைவனின் பெருமைகளைச் சுந்தரர் பாடல்வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) பெரியாழ்வாரின் பக்தியை ஏழாம் திருமொழி இரண்டாம் பத்து வழி விவரி.

13. (அ) ஆண்டாள் கண்ணனைப் பழிப்பது போல் புகழும் தன்மையை நும் பாடப்பகுதி பாடல்கள் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) விண்ணகரத்தின் சிறப்பை இரட்சணிய யாத்திரிகம் வழி விளக்குக.

14. (அ) பெண்ணாசையால் அடையும் தீமைகளை வள்ளலார் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) மனம் தெளிவடைய பத்திரகியார் கூறும் செய்திகளைச் சுருக்கி வரைக.

15. (அ) தாயுமானவர் இறைவனிடம் வேண்டும் வேண்டல்கள் சிலவற்றைத் தருக.

(அல்லது)

(ஆ) வள்ளலாரின் வேட்கை விண்ணப்பத்தைச் சுருக்கித் தருக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்கட்கும் <u>600 வார்த்தைகளுக்கு</u> மிகாமல் <u>கட்டுரை வடிவில்</u> விடை தருக.

16. (அ) இறைவனை வணங்காதவர் அடையும் தீமைகளை திருநாவுக்கரசர் பாடல்கள் மூலம் சுருக்கித் தருக.

(அல்லது)

(ஆ) சம்பந்தர் சிவன் மீது கொண்ட பக்தியைத் திருவெண்ணியூர் பதிகம் மூலம் விளக்குக.

17. (அ) அருணகிரிநாதர் உலக மாயையில் இருந்து விடுபட கந்தனிடம் வேண்டும் வேண்டுதல்களைக் கந்தர் அனுபூதி மூலம் விளக்குக.

(அல்லது)

(ஆ) ஔவையாரின் விநாயகர் அகவல் விளக்கும் கருத்துக்களைச் சுருக்கித் தருக.

18. (அ) நற்செய்தியாளர் கிறிஸ்தியானுக்குக் கூறிய அறிவுரைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) செய்குத்தம்பி பாவலரின் இன்னிசைப் பாமாலை வழி அறியலாகும் கீழக்கரை கல்வத்து நாயகம் அவர்களின் பெருமையை எழுதுக.



19. (அ) தாயுமானவரின் பராபரக்கண்ணி உலக நிலையாமையை அறிவுறுத்துகிறது என்பதை நிறுவுக.

(அல்லது)

(ஆ) கண்ணனுக்குப் பூச்சூட்ட விழையும் பெரியாழ்வாரின் பக்திச் சிறப்பை விளக்குக.

20. (அ) பக்தி இலக்கியங்கள் வழி அறியலாகும் ஆன்மீக உண்மைகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பக்தி இலக்கியங்கள் மக்கள் வாழ்வியலை வளப்படுத்துகின்றன என்பதை நும்பாடப் பகுதி இலக்கியங்கள் கொண்டு நிறுவுக.

———————



*Nesamony Memorial Christian College, Marthandam*